**கொலொன்ன பிரதேச சபை - 2022**

----------------------------------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

கொலான்ன பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 உள்ளவாறான நிதி நிலமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, மூலதனத்திலான மாற்றங்கள் கூற்று, முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரசச் சட்டத்தின் 172(1) ஆம் உப பிரிவு மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ளடக்கப்பட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் தரப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2022 திசெம்பர் 31 இல் கொலொன்ன பிரதேச சபையின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிச்செயலாற்றல் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையான நியாயமான நிலைமையை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க என்னால் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இந்த அறிக்கையின் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் என்ற பகுதியில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் வகையில் என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவானவை மற்றும் பொருத்தமானவை என்பது எனது நம்பிக்கையாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் சம்பந்தமாக முகாமைத்துவத்தினதும் தொடர்புபட்ட நிருவகிக்கின்ற தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க தயாரித்தலும் நியாயமாகச் சமர்ப்பித்தலும் மற்றும் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூய பொருண்மையான பிறழ் கூற்றுக்களற்ற நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு இயலுமான வகையில் தேவையான உள்ளக கட்டுப்பாட்டினைத் தீர்மானிப்பது முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் நடைமுறை சம்பந்தமான பொறுப்பு, நிருவகிக்கின்ற தரப்பினர்களால் ஏற்றுக் கொள்ளப்படும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் சொந்த வருமானங்கள், செலவுகள் சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் என்பன தொடர்பாக முறையான ஏடுகள் மற்றும் அறிக்கைகள் பேணப்படுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு சம்பந்தமாக கணக்காய்வாளரின் பொறுப்பு)**

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி மற்றும் தவறுகளின் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றவை என்பதற்கான உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்புடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் அமுல்படுத்தப்படுகின்ற பொருளாதார தீர்மானம் தொடர்பான ஏற்படுத்துகின்ற தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கை கணக்காய்வு நியமத்தின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக என்னால் கணக்காய்வின் போது தொழில்சார் வெளிப்படைத்தன்மை மற்றும் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் நடவடிக்கை எடுக்கப்பட்டது. என்னால் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களினால் ஏற்படும் ஆபத்துக்களை இனங்காண்பற்கும் மதிப்பீடு செய்வதற்குமாக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்படுத்தப்பட்டன. பிழையாகக் காட்டுவதன் காரணமாக ஏற்படுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து இடம்பெறுகின்ற தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறுகின்ற தாக்கங்கள் பாரியதாக இருப்பதானது தவறான கூட்டிணைவால், போலி ஆவணங்களைத் தயாரிப்பதனால், வேண்டுமென்றே விட்டுவிடுவதனால், பிழையாகக் காட்டுவதனால் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தவிர்ப்பதனால் ஆகிய காரணங்களினால் ஏற்படுவதினாலாகும்.

- உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கமல்லாதிருந்தும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் வகையில் உள்ளகக் கட்டுப்பாடுகள் மீதான அறிவு பெற்றுக் கொள்ளப்பட்டது.

- பயன்படுத்தப்படுகின்ற கணக்கீட்டு கொள்கைகளின் பொருத்தத் தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத்தன்மை, முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் வெளிப்படுத்தல்கள் என்பன மதிப்பீடு செய்யப்பட்டன.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடங்கங்களுக்கா அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளன எனவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

இயலுமான வகையிலும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்பவருனவற்றை பரீட்சிப்பதற்காக கணக்காய்வு நோக்கொல்லை விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களைச் சமர்ப்பித்தல் தொடர்பாக பார்க்கும் போது பிரதேச சபையின் செயற்பாடுகள் தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யப்படக்கூடிய வகையில் அதன் ஒழுங்கமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதியளவிலும் திட்டமிடப்பட்டுள்ளதா எனவும் அதன் முறைமைகள் நடைமுறைகள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாகவும் பேணிச் செல்லப்படுகின்றதா எனவும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கோ அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்க பிரதேச சபை செயற்படுகின்றதா எனவும்,
- தனது அதிகாரங்கள், கடமைகள், மற்றும் பணிகளுக்கு இணங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா எனவும்,
- வளங்கள் சிக்கனமாகவும், செயற்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் காலஎல்லைக்குள் மற்றும் உரிய சட்ட விதிகளுக்கு இணங்க கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டுள்ளதா எனவும் ஆகும்.

### 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகளிற்காக குறித்துரைக்கப்பட்ட ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iii) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் ஒத்திருக்கின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 6(1)(ஈ)(iv) ஆம் பிரிவின் தேவைப்பாடுகளின் பிரகாரம் முன்னைய ஆண்டில் என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் அனைத்தையும் சமர்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களினுள் உள்ளடக்குகின்றன.

### 1.6 நிதிக்கூற்றுக்களை தயாரிப்பது சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

#### 1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ரூபாய்.1,164,487 கூட்டு தொகையான இயந்திர உபகரணங்கள், தளபாடங்கள் மற்றும் பொருத்துக்கள் மற்றும் வாகன தரிப்பிடத்தின் கிரயம் மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கொம்போஸ்ட் நிலையத்தினை நிர்மாணிக்கும் கிரயம் ரூபா.573,787 இனால் அதிகரித்து கணக்கு வைக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் கணக்கு தயாரிக்கும் போது திருத்தப்படும் என்பது. | பெறுமதி சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் டிசம்பர் 31 ஆம் திகதியில் உள்ளபடியான வியாபார கடன் கொடுத்தோர் மீதி ரூபாய்.27,369,952 தொகையும் வியாபார கடன்பட்டோர் மீதி ரூபாய்.25,633,709 தொகையும் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 2023 ஆம் ஆண்டில் கணக்கு தயாரிக்கும் போது திருத்தப்படும் என்பது. | பெறுமதி சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டிற்குரிய நிலுவை அறிவித்தல் பலகை கட்டணம் ரூபாய்.58,650 மற்றும் நிலுவை நிலைமாற்றல் கோபுர வருமானம் ரூபாய்.12,000 கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆம் ஆண்டில் கணக்கு தயாரிக்கும் போது திருத்தப்படும் என்பது. | பெறுமதி சரியாக கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (ஈ) | சபையின் நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்ட நாளாந்த ஊழிய | 2023 ஆம் ஆண்டில் கணக்கு தயாரிக்கும் போது | பெறுமதி சரியாக |

| | | | |
|---|---|---|---|
| | வேதனங்கள் ரூபாய்.110,889 பெற வேண்டிய வருமானமாக கணக்கு வைக்கப்பட்டிருந்ததுடன் வைப்புக்கள் மற்றும் பெற வேண்டிய வார சந்தை கட்டணம் ரூபாய்.134,915 இனால் அதிகரித்து காண்பிக்கப்பட்டிருந்தது. | திருத்தப்படும் என்பது. | கணக்கு வைக்கப்பட வேண்டும். |
| (உ) | 04 கணக்கு விடயங்களின் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளபடியான நிதிக்கூற்றுக்கருள்கு இணங்க மீதி மற்றும் பயன்பாட்டு ஆவணங்களுக்கு இணங்க மீதி ஆகியவற்றுக்கிடையே ரூபாய்.5.241,038 ஆன வேறுபாடு ஒன்று நிலவியது. | 2023 ஆம் ஆண்டில் கணக்கு தயாரிக்கும் போது திருத்தப்படும் என்பது. | வேறுபாட்டுக்கான காரணங்கள் இனங் காணப்பட்டு தீர்ப்பனவு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்காய்வுக்கான எழுத்துமூல சான்றுகளின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ரூபாய். 80,599,514 தொகையான 04 கணக்கு விடயங்களை உறுதிப்படுத்துவதற்கு உரிய விரிவான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2023 ஆம் ஆண்டில் கணக்குகளை தயாரிக்கும் போது உரிய விரிவான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படும் என்பது. | விரிவான பட்டோலைகள் தயாரிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காத சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசின் நிதி பிரமாண கோவையின் நிதி பிரமாணம் 371(5) இற்கு முரணாக 1998 ஆம் ஆண்டின் போது வழங்கப்பட்டிருந்த ரூபாய். 33,000 ஆன முற்பணம் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | பணத்தை மீளளிப்பு செய்ய முடியாமையால் பதிவளிப்பதற்கான அங்கீகாரத்திற்காக மாகாணசபைக்கு சமர்ப்பித்துள்ளமை. | நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 7,947,409 தொகையாக இருந்ததுடன், அதற்கு நேரொத்ததாக முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,730,845 ஆகும்.

### 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், மீளாய்வாண்டு மற்றும் கடந்த வருடத்திற்குரிய மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியாக மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 753,700 | 1,055,365 | 1,118,915 | 360,729 | 848,400 | 874,176 | 753,374 | 421,919 |
| வாடகை | 5,165,914 | 3,624,433 | 3,494,522 | 2,443,126 | 6,038,644 | 4,199,004 | 2,240,680 | 3,062,280 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,115,500 | 973,580 | 973,580 | - | 1,077,275 | 892,960 | 898,060 | - |
| ஏனைய வருமானங்கள் | 3,316,542 | 3,316,542 | 1,046,258 | - | 10,688,192 | 1,241,554 | 1,137,727 | 103,827 |
| | 10,351,656 | 8,969,920 | 6,633,275 | 2,803,855 | 18,652,511 | 7,207,694 | 5,029,841 | 3,588,026 |

### 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

சபையின் வருமான சேகரிப்பு செயலாற்றல் தொடர்பான அவதானிப்புகள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 ஆம் ஆண்டில் அபிவிருத்தி அடைந்ததாக வர்த்தமானியில் வெளியிடப்பட்ட பிரதேசங்களின் வீதவரியினை அறவிடுவதற்கு 2023 ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே 1983 ஆம் ஆண்டு முதல் உடன்படிக்கை இன்றி வழங்கப்பட்டிருந்த காணிக் குத்தகை அலகுகள் 30 இன் மதிப்பீட்டு கட்டணங்கள் 2010 ஆம் ஆண்டின் பின்னர் திருத்தி அமைக்கப்பட்டிருக்கவில்லை. | ஆதன மதிப்பீடு மேற்கொள்வதற்கு விலை மதிப்பீட்டு திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளமை. | வீதவரி அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | வியாபார அனுமதி பத்திர கட்டணங்கள், வியாபார வரி மற்றும் கைத்தொழில் வரி ரூபாய்.238,680 தொகையும் அறிவித்தல் பலகை கட்டணங்கள் ரூபாய்.135,145 தொகையும் முச்சக்கரவண்டி அங்கத்துவ கட்டணங்கள் ரூபாய்.111,000 தொகையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | எரிபொருள் மற்றும் சுகாதார நெருக்கடி காரணமாக இவ்வாறான நிலுவையொன்று காணப்படுகின்றமை மற்றும் நிலுவை அறிவித்தல் பலகை கட்டணங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றமை. | வருமானங்கள் தாமதமின்றி அறவிடப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 திண்மக் கழிவு முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | கூட்டெரு நிலையத்தினை நிர்மாணித்தல் மற்றும் அதற்குத் தேவையான இயந்திரங்களை கொள்வனவு செய்வதற்காக 2020 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் ரூபாய்.7,612,713 ஆன செலவினம் மேற்கொள்ளப்பட்டிருந்தது. அவ்வாறே 2022 ஜூலை மாதம் மாகாண சபையிலிருந்து ரூபாய்.950,000 பெறுமதியான பிராய்லர் இயந்திரம் ஒன்றும் கிடைத்திருந்தது. எனினும் மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் கூட்டெரு செயற்திட்டத்தின் பணிகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | மின்சார இணைப்பினை பெற்றுக் கொண்ட பின்னர் திண்மகழிவு முகாமைத்துவ நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட உள்ளமை. | முறையான கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் ஒன்று திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | சபையின் அதிகார எல்லையினுள் மீளாய்வாண்டின் போது சுமார் 840 மெட்ரிக் தொன் கழிவு அகற்றுவதற்கு 06 ஊழியர்கள் மற்றும் 02 வாகனங்களுக்காக ரூபாய்.3,145,472 செலவிடப்பட்டிருந்த போதிலும் அந்த கழிவு சுற்றாடலுக்கு இசைவான முறையில் அப்புறப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | கூட்டெரு நிலையத்தில் அடிப்படை வசதிகளை பூர்த்தி செய்து அதன் பணிகளை முறைமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் என்பது. | கழிவு முகாமைத்துவ நிகழ்ச்சித்திட்டம் ஒன்று திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். |

**3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபைக்கு சொந்தமான 49 மயானங்களில் 32 மயானங்களின் உரித்திணை தீர்ப்பனவு செய்திருக்கவில்லை. | அந்த காணிகளை சுவீகரிக்கும் பணிகள் இடம்பெறுகின்றமை. | உரித்தினை சுவீகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | டிப்பர் வண்டி ஒன்றினை பழுது பார்ப்பதற்கு 2020 ஆம் ஆண்டில் கையளிக்கப்பட்டு 2021 ஆம் ஆண்டு முற்பணமாக ரூபாய்.437,475 செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2022 டிசம்பர் மாதம் வரையிலும் பழுதுபார்த்தல்கள் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2022 நவம்பர் 01 ஆம் திகதி வாகனம் பழுது பார்த்தல் தொடர்பில் ஆராய்தல் இடம்பெற்றுள்ளமை. | பழுதுபார்த்தல் நடவடிக்கைகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.3 பெறுகை

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| ஹலர் இயந்திரம் ஒன்றினை கொள்வனவு செய்வதற்கு 02 நிறுவனங்களிலிருந்து கூறுவிலைகள் கிடைத்திருந்த போதிலும் ஒரு நிறுவனத்தில் இருந்து மாத்திரம் கூறுவிலை கிடைத்ததாக போலியாக விடயங்கள் குறிப்பிடப்பட்டிருந்தது. இது தொடர்பில் மதிப்பீட்டிற்கு உள்ளாக்கப்படாத நிறுவனத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட ஆகக் குறைந்த விலையை ஏற்றுக் கொள்ளாமையால் சபைக்கு ரூபாய்.644,400 ஆன நிதி ரீதியான நட்டம் ஒன்று ஏற்பட்டிருந்தது. | ஆகக் குறைந்த விலைகளை சமர்ப்பித்த நிறுவனத்தின் இயந்திரத்தின் அமைப்பு குறிப்பீடுகளுக்கு இணங்க காணப்படாமையால் மற்றைய நிறுவனத்தில் இருந்து இயந்திரம் கொள்வனவு செய்யப்பட்டமை. | பதில்கள் தவறானதாகும். நட்டத்திட்டத்திற்கு பொறுப்பு கூற வேண்டிய உத்தியோகத்தர்க ளிடமிருந்து அறவிடுப்பட வேண்டும். |